**இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் *I* இன் உத்தியோகத்தர்களுக்கான மூன்றாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - (2022)2020 )முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பத்திரப் பாடநெறி)**

*01. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,284 மற்றும் 2022.06.10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கான மூன்றாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2020 (2022)க்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.12.31 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2,305 மற்றும் 2022.11.04 ஆந் திகதி வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

*02. அதற்கமைவாக, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கும் இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.*

*03. அந்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

ஒப்பம் /. கே. டீ. என். ரஞ்சித் அசோக
மேலதிகச் செயலாளர் ( பொது நிர்வாகம்)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2305 - 2022 නොවැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2022.11.04**

*2305 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1682 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1679-B 82397-5,413 (2022/11)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020 (2022)

(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,284 மற்றும் 10.06.2022 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I தரத்துடைய அலுவலர்களுக்கான மூன்றாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020 (2022) இற்கான விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 31.12.2022 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் 01 மற்றும் 03 ஆம் பந்திகள் மற்றும் மாதிரி விண்ணப்பத்தில் 12அ (ii), ஆ (ii) இற்கான பின்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய காரணங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி இருக்கும்.

01 ஆம் பந்தி : இலக்கம் 1930/12 மற்றும் 2015.09.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணத்திற்கு இணங்க மேற்படிப் பாடநெறி இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் மூலம் 2023, பெப்புருவரி மாதம் தொடக்கம் வார இறுதி நாட்களில் ஒரு பாடநெறியாக 15 வாரங்களுக்கு சகல சனிக்கிழமைகளிலும் நடாத்தப்படுவதாக இதனால் அறிவிக்கப்படுகின்றது.

03 ஆம் பந்தி : இப்பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப பரீட்சார்த்திகள் தாமாகவே விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும் என்பதோடு, அதற்கமைய இலங்கை தொழில்நுட்ப சேவையின் மத்திய அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், தமது திணைக்களத்தின் தலைவர் மூலமும், இலங்கை தொழில்நுட்ப சேவையின் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் மூலமும், 2022, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் “பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை” என்ற முகவரிக்கு தனது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், “இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020 (2022)” எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எவ்வித பரீட்சிப்புக்களும் இன்றி நிராகரிப்பதற்கு பீடாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

12. (அ) நீர் இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்துடைய அலுவலராயின் :

(ii) 2022.12.31 ஆந் திகதிக்கு I தரத்தில் முனைப்பான சேவைக்காலம் :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

(தாமாகவே உண்மைப் பிரதி என சான்றளிக்கப்பட்ட I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை இணைப்பொன்றாக சமர்ப்பிக்கவும்.)

(ஆ) நீர் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் தரத்துடைய அலுவலராயின் :

(ii) 2022.12.31 ஆந் திகதிக்கு II தரத்தில் முனைப்பான சேவைக்காலம் :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

எம். எம். பீ. கே. மாயாதுன்ன,
செயலாளர்,
பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2022, ஒற்றோபர் 27.

(வர்த்தமானி அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதவிறக்கம் செய்ய முடியும்.)

11-89

---

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் / புள்ளிவிபரவியலாளர்கள் பொருட்டான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (2023)

## First Efficiency Bar Examination for Senior Statisticians/Statisticians of the Department of Census and Statistics - 2015 (2023)

1. சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள்/புள்ளிவிபரவியலாளர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2023, மாச்சு மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குரிய பாடங்களில் ஒரே தடவையாகவோ அல்லது வெவ்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும். இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடம் பொருட்டு ரூபா 600.00 உம், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தோற்றுவதாயின் ரூபா 1,200.00 உம் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/ உப தபால் அலுவலகத்தில் அல்லது ஏதேனும் மாவட்ட/ பிரதேச செயலகத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் பொருட்டு காசுக்கட்டளையோ அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச்

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

தபால் முத்திரை அளவிலான புகைப்படம் இங்கு ஒட்டவும்.

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை தொழிநுட்ப சேவையின் *I* ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை –2020(2022) (முகாமைத்துவம் தொடர்பான மூன்றுமாத சான்றிதழ் பாடநெறி)**

**Third Efficiency Bar Examination for the Officers in Grade I of Sri LankaTechnological Service – 2020(2022) (Three Months Certificate Course on Management)**

01. (அ). முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர்:...................................
( ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உதாரணம்: GUNAWARDHANA, M.G.B.S.K.

(ஆ). முழுப்பெயர் :..................................................................
( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :...................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

02. தாங்கள் மாகாண அரசாங்க சேவை அல்லது எவ்வித அரசாங்க சேவைக்கு உட்படுகின்றீர்கள் என்பது பற்றி உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக. [ ]

(அரசாங்க சேவை - 10 / மேல் மாகாண அரசாங்க சேவை – 01 / மத்திய மாகாண அரசாங்க சேவை – 02 / தென்மாகாண அரசாங்க சேவை – 03 / வட மாகாண அரசாங்க சேவை – 04 / கிழக்கு மாகாண அரசாங்க சேவை – 05 / வடமேல் மாகாண அரசாங்க சேவை – 06 / வடமத்திய மாகாண அரசாங்க சேவை – 07 / ஊவா மாகாண அரசாங்க சேவை – 08 / சப்ரகமுவ மாகாண அரசாங்க சேவை – 09)

03. பதவிப் பெயர் ( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்):.......................................

04. தாங்கள் பணியாற்றுகின்ற உப திணைக்களம் / பிரிவு :
( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) ................................................
(சிங்களத்தில்/தமிழில்) ................................................

05. தாங்கள் பணியாற்றுகின்ற திணைக்களம் :
( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) ................................................
(சிங்களத்தில்/தமிழில்) ................................................

06. அரசாங்க முகவரி
( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) ........................................................
(சிங்களத்தில்/ தமிழில்) .......................................................

07. தனிப்பட்ட முகவரி :
( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) .......................................................
(சிங்களத்தில்/ தமிழில்)
.......................................................
(ii) வசிக்கும்மாவட்டம் .....................................................

08. மின்னஞ்சல் :.......................................

09. தொலைபேசி இல.

| தனிப்பட்ட | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலக | | | | | | | | | | |

*10.* பால்நிலை

ஆண் -*M*
பெண் - *F*
(குறித்த எழுத்தை கூட்டினுள் எழுதுக)

*11.* *(i)* தேசிய ஆளடையாள அட்டை இல.

(தங்களால் சத்திய பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் பிரதியொன்றை இணைக்கவும்.)

*(ii)* பிறந்த திகதி : ஆண்டு மாதம் நாள்

*12.* அ) தாங்கள் இலங்கை தொழில்நுட்ப சேவையின் *I* ஆம் தரத்துடைய அலுவலராயின்;

*(i)* தரம் *I* இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி :
ஆண்டு மாதம் நாள்

*(ii)* *2022.12.31* ஆந் திகதியன்றுதரம் *I* இல் முனைப்புடனான சேவைக்காலம்

ஆண்டு மாதம் நாள்

(சான்றுப்படுத்திய பிரதியென அங்கீகார ஒப்பமிடப்பட்ட *I* ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை இணைக்கவும்.)

ஆ) தாங்கள் இலங்கை தொழில்நுட்பச்சேவையின் *II* ஆம் தரத்துடைய அலுவலராயின்;
*(i)* தரம் *II* இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி :

ஆண்டு மாதம் திகதி

*(ii)* *2022.12.31* ஆந் திகதியன்று தரம் *II*இல் முனைப்புடனான சேவைக் காலம்:

ஆண்டு மாதம் திகதி

*(iii)* இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை சித்தியெய்திய திகதி

ஆண்டு மாதம் திகதி

(திணைக்களத் தலைவரினால் அலுவலருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பெறுபேறு அட்டவணையினை தாமாக உண்மையான பிரதியென உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.)

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் சரியானவை எனவும் மேலும், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும், தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுவேன் எனவும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உறுதியுரைக்கின்றேன்.

................................... ......................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**<u>கையொப்பத்தை உறுதிப்படுத்தல்</u>**

*எனது அலுவலகத்தில் திரு/திருமதி/செல்வி.................................. சேவையாற்றுகின்றார் எனவும், நான் அவரை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், ....................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.*

................................ ........................................................................................

**திகதி** **கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை**

**<u>திணைக்களத் தலைவரின் சான்றுரை</u>**

*<u>மேலே இல. 01 இருந்து 12 வரையிலான பந்திகளில் அடங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும் , 07 ஆம் பந்தியின் குறிப்புக்களுக்கு அமைய மற்றும் 08, 09 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிந்தும் அப்பரீட்சார்த்தி இப் பாடநெறியில் கலந்து கொள்வதற்கு தகைமை பெற்ற இலங்கை தொழிநுட்ப சேவையைச் சேர்ந்த அலுவலர் எனவும்</u>, உரிய பாடநெறிக் கட்டணம் திணைக்களத்தினால் செலுத்தப்படும் எனவும் உறுதியுரைக்கின்றேன்.*

................................ ..............................................................

**திகதி** **திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை**

***<u>சரிபார்க்கவும்</u>***

*1. தங்களால் சத்திய பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.* ☐

*2. தங்களால் சத்திய பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.* ☐

*3. முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்தின் வலதுபக்க மேல்மூலையில் ஒட்டப்பட்டுள்ளது.* ☐

*4. முத்திரை அளவிலான புகைப்படப் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.* ☐

*5. தம்மால் உண்மைப் பிரதியென சான்றுப்படுத்திய I ஆம் தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.அங்கீகார ஒப்பமிடப்பட்ட* ☐

*மற்றும்*

*தம்மால் உண்மைப் பிரதியென சான்றுப்படுத்திய திணைக்களத் தலைவரினால் அலுவலருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பெறுபேற்று ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.* ☐